சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **57/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | ராமச்சந்திரன் |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் |
| கிராமம் | : | பேரளம் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | கிராம உதவியாளர் |
| வயது | : | 61 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி வேறொரு வழக்கில் சிறையில் உள்ளார். PT வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 4, மற்றும் 6 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். 18. பேரளம் கிராமத்தில், கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். அ.சா.1 கணபதியை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில்

உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

கடந்த 20.07.2011ம் தேதியன்று எதிரிகளில் 1வது எதிரி சித்திரை செல்வன் (எ) இளஞ்செழியன், 6ம் எதிரி அப்பு (எ) கார்த்தி ஆகியோர்கள் ஒப்புதல் வாக்குமூலம் சொல்லும்போது, உடனிருந்து, நான் கையொப்பம் செய்ததாகவும், எதிரிகள் கொலைக்கு பயன்படுத்திய அரிவாள், பட்டாக்கத்தி மற்றும் கம்பி, எதிரிகள் தப்பிச் செல்ல பயன்படுத்திய இரு சக்கர வாகனம், ஆகியவைகளை ஆஜர் செய்ததாகவும், உடனிருந்து கைப்பற்றுதல் மகஜரிலும் நான் கையொப்பம் செய்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது சம்பவத்தை முற்றிலுமாக மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.12 18:32:49 +05'30'

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.